www.tamilarangam.net

**amnesty international**

## புலிகளின் தடுப்பு முகாம்கள்; மன்னிப்புச் சபை அறிக்கை

விடுதலைப் புலிகளால் வடக்குக் கிழக்கில் நிகழ்த்தப்படும் தடைக் காவல்களையும் நீதியற்ற படுகொலைகளையும் உடன் நிறுத்துமாறு சர்வதேச மன்னிப்புச்சபை கோரியுள்ளது.

கடந்த ஒக்டோபர் மாதத்திலிருந்து இலங்கையின் தென்பகுதியில் தீவிரமாக இயங்கும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் வடக்குக் கிழக்கிலுள்ள தடை முகாம்களுக்கு செல்ல அனுமதி வழங்கப்பட வேண்டும் என சபை சிபாரிசு செய்துள்ளது.

புலிகளின் எதிர்ப்புத் தமிழ்க் குழுக்களால் சட்டபூர்வமற்ற முறையில் திரட்டப்பட்ட தமிழ்த் தேசிய இராணுவத்தில் முன்னர் உறுப்பினர்களாக இருந்த பலருட்பட ஏராளமான இளைஞர்களை புலிகள் கைது செய்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது. இந்திய அமைதிப் படையின் பின்னணியுடன் இயங்கிய தமிழ்த் தேசிய இராணுவம் புலிகளுக்கு எதிராக, மார்ச்சில் இந்தியப் படைகள் விலகமுன் போரிட்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள், முன்னாள் தமிழ்த் தேசிய இராணுவ உறுப்பினர்கள் தாமாகவே அப்படையில் சேர்ந்தனரா அல்லது சேர்க்கப் பட்டார்களா என விசாரிக்கின்றனர். கிடைக்குந் தகவல்களின்படி பலவந்தமாகச் சேர்க்கப்பட்டோர் விடுவிக்கப் படுகின்றனர். ஆனால், தாம் பலவந்தமாகச்சேர்க்கப் பட்டனர் என நிரூபிக்க இயலாதோர் தனிப்பட்ட வீடுகளிலுள்ள தடை முகாங்களிலும், புலிகளின் பதுங்கு குழிகளிலும், முல்லைத்தீவுக் காடுகளிலுள்ள [முகா]ங்களிலும் வைக்கப் பட்டுள்ளனர். 1989 பெப்புரவரி பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டமைக்காக வேறும் சிலர் தடுப்புக் காவலில் வைக்கப் பட்டுள்ளனர் தடுத்து வைக்கப் பட்டோரைப் பார்வையிட உறவினர்களைப் புலிகள் அனுமதிப்பதில்லை. இதுபற்றிய விசாரணைகளைப் பதிவுசெய்ய யாழ்ப்பாணத்தில் ஒரு மத்திய அலுவலகத்தைத் திறந்துள்ளனர்.

இந்தியப்படை விலகலின்பின் புலிகளுக்கும், இந்திய ஆதரவுத் தமிழ்க் குழுக்களுக்கும் இடையே நிகழ்ந்த மோதலில் நூற்றுக் கணக்கானோர் உயிரிழந்தனர். இந்திய ஆதரவுக் குழுக்களின் பாதுகாப்பற்ற உறுப்பினர்கள், ஆதரவாளர்கள்மீதும (மோதலுக்குப் புறம்பாக) புலிகளால் தாக்குதல் நடாத்தப்பட்டதாக செய்திகள் வெளியாகியுள்ளன. கடந்த ஜனவரியில் சம்மாந்துறையில், வடக்குக் கிழக்கு பாராளுமன்ற உறுப்பினரான முஸ்லீம் காங்கிரஸ் பிரதிநிதி ஒருவர் அவரது வீட்டில் வைத்துச் சுட்டுக் கொல்லப் பட்டார். சுட்டவர்கள் புலிகள் என அறிவிக்கப்படுகிறது. சில தினங்களின் பின் பாதுகாப்பற்ற பல பொதுமக்கள் புலிகளால் கொல்லப் பட்டதாகவும், இவர்களில் கல்முனை வைத்தியசாலையில் இருந்த ஐந்து முஸ்லீம் நோயாளிகளும் அடங்குவர் எனவும் அறிவிக்கப் படுகிறது.

சில கொலைகளுக்கு உரிமைகோரும் புலிகள் ஏனையவற்றை மறுத்துள்ளனர். மே 7ஆந் திகதி ஈபிஆர்எல்எஃப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கனேடியத் தூதரகத்துக்கு முன்னால் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார். இங்கிலாந்திலுள்ள புலிகளின் தொலைபேசிச் செய்தி கொலை செய்தோரை 'அடையாளந் தெரியாத துப்பாக்கி ஏந்திய நபர்கள்' என்று கூறியதோடு, 'ஈழத் துரோகிகள் தமிழ்ப் பகுதிகளில் மட்டுமல்ல சிங்களப் பகுதிகளிலும் வைத்துக் கொல்லப் படுவார்கள் என்பதையே இது காட்டுகிறது' எனக் குறிப்பிட்டது.

பொதுவாகக் குற்றச் செயல்களில் ஈடுபடுவோரை புலிகள் உடனடி மரணதண்டனைக்கு உட்படுத்துவதோடு, பிணக்குகளைத் தீர்க்க சொந்தமாக விசாரணையை நடாத்துவதாகவும் அறிவிக்கப் படுகிறது. ஏப்ரல் 5ஆந் திகதி கற்பழிப்பு முயற்சியில் ஈடுபட்டதாக சந்தேகத்தில் கைதான ஒருவர் விடுதலைப் புலிகள் என நம்பப்படுவோரால் கொல்லப் பட்டதாக கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன. சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட, நியாயமான விசாரணையை மேற்கொள்ளக் கூடிய ஒழுங்கான முறையில் அமைக்கப்பட்ட நீதிமன்றம் தவிர்ந்த எவராலும், எந்தவிதத் தண்டனையையும் வழங்கக் கூடாது என சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்துகிறது.

– நிலாந்தன் (சர்வதேச மன்னிப்புச் சபையின் செய்தி ஏடு மே30, 1990) –

## இலங்கை அகதிகள்... 300 ரூபாய்க்காக குடும்பக் கட்டுப்பாடு!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்